**IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, PUDUKKOTTAI**

**Deposition of Witnesses for P.W.1 in MCOP.No. 332/2022**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : முருகதாஸ் | தந்தை / கணவர் பெயர் | : குமாரராஜா |
| கிராமம் | : | வட்டம் | : |
| வயது | : | மாவட்டம் | : |

Solemnly affirmed accordance with the provisions of the Act of 1973 of the day of 30.10.2025.

**முதல் விசாரணை**

நான் எனது தரப்பு சாட்சியத்தை எழுத்துமூலமான நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். எனது நிரூபண வாக்குமூலத்தை எனது தரப்பு முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள கேட்டுக்கொள்கிறேன். (மேற்படி சாட்சி மூலம் ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.)

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் விபரங்கள் சொல்லிதான் எனது நிரூபண வாக்குமூலம் தயார் செய்யப்பட்டது. விபத்து சம்மந்தமாக என் கைவசம் ஆவணங்கள் எதுவும் இல்லை. விபத்தில் இறந்துபோன நபர் எனது சகலை ஆவார். விபத்து சம்மந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் எதுவும் அளிக்கவில்லை. விபத்து சம்மந்தமான குற்ற வழக்கில் நான் சாட்சியாக இல்லை. விபத்து சம்மந்தமாக யார் மீது குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்று நான் விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை. சடலக்கூராய்வு செய்யும்போது நான் அங்கிருந்தேன். பிரேத விசாரணை நடத்தப்பட்டதா என்று எனக்கு தெரியாது. விபத்து சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உண்மை சங்கதியை மறைத்து பொய்யாக கூறியுள்ளேன் என்று சொன்னாலும், இறந்துபோன நபர் எனது நெருங்கிய உறவனிர் என்பதால் அவருக்குஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் விபத்து சம்பவம் சம்மந்தமான கண்ணுற்ற சாட்சியாக இல்லை என்று சொன்னால் சரியல்ல.

Sd/-முருகதாஸ்

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.

Sd/- திரு.K.S.பால்பாண்டியன்,
தலைமை நீதித்துறை நடுவர்,
புதுக்கோட்டை.